(ஈ) விஹாரையின் பாதுகாப்பு, பேணுதல் மற்றும் அபி விருத்தி என்பவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்தல் ;

(உ) வதியும் பிக்குமார்களுக்கு பாதுகாப்பையும், உணவு களையும் மற்றும் அவர்களின் நாளாந்த தேவைகளை யும் வழங்குதல் ;

(ஊ) விஹாரை வளவுகளில் மதம் சார் செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல் ;

(எ) பௌத்தர்களின் ஒழுக்கக் கோட்பாட்டு அடிப்படையி லான சமய வழியிலான வாழ்க்கை ஒன்றுக்கும் பஞ்ச சீலங்களின் அவதானிப்புக்கும் இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் ஆகிய பௌத்தர்களை இட்டுச் செல்லுதல்;

(ஏ) தம்ம பாடசாலைகளைத் தாபித்தலும் பேணுதலும், பரீட்சைகளை நடாத்துதலும், போட்டிகளை ஒழுங்கு செய்தலும் மற்றும் தம்ம பாடசாலைகளினால் தேவைப் படுத்தப்பட்ட உபகரணங்களை ஏற்பாடு செய்தலும் ;

(ஐ) இயைபான அதிகாரிகளின் அங்கீகாரத்துடன் சிறி பாத இடப்பரப்பினுள் அவசரத் தேவைகளை எதிர்கொள் ளும் பக்தர்களுக்கு சிகிச்சையளிக்கும் நோக்கில் வைத்தியசாலை ஒன்றை தாபித்தலும் பேணுதலும் ;

(ஒ) விஹாரையின் புனித பதவியில் நியமிக்கப்பட்ட பிக்கு மார்களின் கல்விசார் செயற்பாடுகளையும் மற்றும் பயிற்சி தேவைப்பாடுகளையும் நிறைவேற்றுவதில் உதவுதல் ;

(ஓ) பௌத்தத்தின் வாழ்வாதாரத்திற்கென சமயச் செயற் பாடுகள், தர்ம உபதேசங்கள் மற்றும் சமய மாநாடு களை ஒழுங்கு செய்தல் ; அத்துடன்

(ஔ) விஹாரையைச் சுற்றியுள்ள இடப்பரப்பையும் விஹாரை யையும் அபிவிருத்தி செய்வதற்கென பௌத்த கோட் பாட்டின் அடிப்படையில் பெரஹரா, உணவளித்தல் விழாக்கள், மெச்சத்தக்க செயற்பாடுகள் மற்றும் வேறு தன்னிச்சையான செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல்.

